(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(12).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 மே 10 புதன்கிழமை வெளியிடப்பட்டது

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 27/2023

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ நிமல் லான்சா

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட,— இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு,—

கடந்த சில வருடங்களில் இலங்கை கடற் பரப்பில் ஏற்பட்ட நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் காரணமாக இலங்கையின் சமுத்திர சுற்றாடல் தொகுதிக்கும் நீர்வாழ் உயிரினங்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதனாலும்;

மேற்படி விபத்துகளின் மூலம் இடம்பெற்ற சுற்றாடல் பாதிப்பானது இன்னும் பல வருடங்கள் வரை காணப்படுமென சூழலியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளதனாலும்;

விபத்துச் சம்பவங்கள் இடம்பெறும் வரையிலும் விபத்துகளின் பின்னரும் இடம்பெற்ற பல்வேறுப்பட்ட இடையீடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக சமூகத்தில் மீண்டும் பரவலாக பேசப்பட்டு வருவதோடு இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில உறுப்பினர்கள் இந்த சபையிலும் அதற்கு வெளியிலும் இவ் விபத்துகள், கப்பல் நிறுவனங்களுக்கும் காப்புறுதி நிறுவனங்களுக்குமிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பெயர்கள் சம்பந்தமாக வெளிப்படுத்தியதையடுத்து அதற்கு ஊடகங்களின் வாயிலாகவும் பாரிய பிரச்சாரம் வழங்கப்பட்டிருந்ததனாலும்; மற்றும்

இச்சம்பவங்களின் உண்மைத்தன்மை வெளிக்கொணரப்பட வேண்டுமென மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதனாலும்;

இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பதினைந்து (15) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டமைந்த பாராளுமன்ற விசேட குழு ஒன்று துரிதமாக நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

   (ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும் பதினைந்துக்கு (15) மேற்படாத உறுப்பினர்களை குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

   (ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

   (இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

   (ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து இரண்டு (02) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப் பகுதிக்குள் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.